தேதி - 20.03.2023 **E.O.P.No**.78/2020 ம.சா.2 (லோகநாதன்)

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் மனுதாரரால் தயார் செய்யப்பட்டு அதில் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் என்ன என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மனுதாரருக்கு ஆதரவாக பவர்ஏஜெண்டாக பணியாற்றி வந்தேன். பொதுவாக பவர்ஏஜெண்டுக்கு அடையாள அட்டை கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு ஆதரவாக பவர் ஏஜெண்டாக பணியாற்றியிருந்தால் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் மனுதாரருக்கு பவர்ஏஜெண்டாக செயல்படாததால் தான் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கொட்டாம்பட்டியிலுள்ள 4 வது வார்டுக்கான மொத்த வாக்கு எண்ணிக்கை 4,409 ஆகும். மேற்படி தேர்தலுக்கான வாக்குஎண்ணிக்கை முறையான பாதுகாப்புடன் தான் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். எங்களுடைய கட்சி முன்னிலையில் தான் வேட்பாளருடைய வாக்குகள் அவரவர் கட்சியில் பெற்ற வாக்குகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு அந்தந்த பெட்டியில் சேகரிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாக்குஎண்ணிக்கை முடிந்தவுடன் மனுதாரர் புகார் மனு கொடுத்தார் என்றும், அதில் நான் எந்தவிதமான சாட்சி கையொப்பமும் போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தேர்தல்பணி என்பது சரியாக நடைபெற்றது என்றும், தேர்தல் அலுவலர்கள் அவர்களது பணியை சரியாகத் தான் செய்தார்கள் என்றும், மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மனுதாரருக்கு ஆதரவாக தேர்தல்பணி சரியாக நடைபெறவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.